செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 144 நாள் : 13/3/17

# செய்திக் குறிப்பு

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பேராயர் டாக்டர் எம்.பிரகாஷ் அவர்கள் மற்றும் ஆணையக்குழு உறுப்பினர்கள் வருகின்ற 15.03.2017 அன்று வேலூர் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளனர். சிறுபான்மையினர் சமுதாயத்தை சார்ந்த தலைவர்கள் மற்றும் சிறுபான்மையினத்து மக்கள் பிரதிநிதிகளையும் 15.03.2017 (புதன்கிழமை) அன்று காலை 10:30 மணியளவில் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் சந்தித்து சிறுபான்மையினருக்கென தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து ஆலோசிக்கவும் கருத்துக்களைக் கேட்டறியவும் உள்ளனர்.

அவ்வமயம் சிறுபான்மையினருக்கான கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த பொதுமக்களின் பிரதிநிதிகள் யாவரும் மாநில சிறுபான்மையினர் ஆணையக்குழுவினரை சந்தித்து தங்களது குறைகளையும், அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்தும், சிறுபான்மையினர் நல மேம்பாட்டிற்கான தக்க கருத்துக்களையும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- சி.அ. இராமன்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்.

//உத்தரவுப்படி//

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக.

13/3/17
செ.ம.தொ.அ.
வேலூர் - 9.

13/3/17